**தலைப்பு 308 – தபால் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தபால் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தபால் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தபால் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) திணைக்களத்தால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) தபால் திணைக்களத்தில் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருமானமல்லாத பெறுவனவின் கீழ் ஏனைய வருமானமாக காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 2,939,341,090 தொகைக்குப் பதிலாக நிதிக்கூற்றில் ரூபா 2,294,597,076 தொகை காண்பிக்கப்பட்டமையால் அந்தப் பெறுமதி ரூபா 644,744,014 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏனைய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்குக் கூற்றுக்களில் பதியப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியாக இருந்த போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றுக்கு உரித்தான உரிய படிவத்தில் தனியாக காண்பிப்பதற்கு இடவசதி இல்லாத அதிகமான விடயங்களுக்குரிய சீராக்கங்கள் மேற்கொண்டதன் பின்னரான ரூபா 2,294,597,076 பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியத்தின் பெறுவனவு (PSPF) ரூபா 11,200,568 தொகை வருமானப் பெறுவனவுகளின் கீழும் நிதியத்தின் கொடுப்பனவுகள் ரூபா 4,382,021 தொகை பிரதான பேரேட்டில் செலவினத்தின் கீழும் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை | சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரசாங்கத்தின் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவதற்குரிய படிவத்தில் இடவசதிகள் வழங்கப்படாமையினால் அரசாங்க ஊழியர்களின் சேமலாப நிதியம் (PSPF) இன் பெறுவனவுகள் ரூபா 11,200,568 தொகை மற்றும் நிதியத்தின் கொடுப்பனவுகள் ரூபா 4,382,021 தொகையான பெறுமதி ஏனைய வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் ஏனைய பெறுவனவுகளின் |

| | | | |
|---|---|---|---|
| | | | பெறுமதியில் சீராக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் ACA2(ii) செலவின கூற்றில் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் செய்யப்பட்ட செலவினம் ரூபா 17,207,449 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 26,245,264 ஆக இருந்தது. அதன் வேறுபாடான ரூபா 9,037,815 தொகை திணைக்கள காசேட்டின் பிரகாரம் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | ஏனைய திணைக்களங்களின் ஊடாக செய்யப்பட்ட செலவினங்கள் உரிய நிரலில் உள்ளடக்கப்பட வேண்டும். | இந்த செலவினம் இதுவரையிலும் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட வரவாக பதியப்பட வேண்டிய போதிலும் அந்த செலவினம் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 690,083,977 தொகை பிரதான பேரேட்டில் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்படவில்லை. | திறைசேரிக்கு அனுப்பப்பட்ட பணம் பிரதான பேரேட்டின் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். | நிதி செயலாற்றல் கூற்றில் ஏசீஏஎப் படிவத்தில் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 690,083,977 தொகை பதிவதற்கு நிரல் ஒன்று காணப்படாமையினால் அப்பெறுமதி வருமானமற்ற பெறுவனவுகளின் கீழுள்ள ஏனைய பெறுவனவுகளின் பெறுமதியில் சீராக்கப்பட்டிருந்தது. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக ரூபா 1,290,817,826 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதியை திணைக்களத்தின் புத்தகங்களில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்ட ஆதனங்கள், பொறிகளின் பெறுமதிகளை திணைக்கள புத்தகங்களில் உறுதிப்படுத்த வேண்டி உள்ளது. | சீகாஸ் இன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி மீண்டும் மீள் கணிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மற்றும் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,290,817,826 தொகையான பெறுமதி ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மாவட்டக் கணக்கு அலுவலகம், மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகம் மற்றும் பிரதான அலுவலகங்களில் சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேட்டில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | | எடுக்கப்பட்டதுடன் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகளின் பிரகாரம் பழைய நிலையான சொத்துப் பதிவேடுகளில் உரிய நாளதுவரையாக்கம் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த பணமாக ரூபா 170,722.18 மில்லியன் தொகை காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 7,929.80 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 162,993.38 மில்லியன் தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டும். | செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது காசு மூலமான கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டு பதியப்பட்டிருந்ததுடன் குறிக்குப்பதிவு காசுப்பாய்ச்சல் கூற்றின் போது கவனத்தில் கொள்ளப்படாமையினால் கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைந்த பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) காசு செலவினத்தின் கீழ் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினமாக ரூபா 13.327.22 மில்லியன் தொகை காண்பிக்க வேண்டி இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 13,194.25 மில்லியனாக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 132.96 மில்லியன் தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சுட்டிக் காண்பிக்கப்பட்ட பிரகாரம் சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | - மேற்படி - |
| (இ) செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் மானியங்கள் மற்றும் மாற்றல்களாக காண்பிக்க வேண்டி பெறுமதியான ரூபா 120,956,864 தொகைக்கு பதிலாக | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அப்பெறுமதி ரூபா 40,633,134 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 80,323,730 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு செய்தலின் கீழ் காண்பிக்க வேண்டிய ரூபா 96,215,373 தொகைக்குப் பதிலாக ரூபா 242,736,583 தொகை காண்பிக்கப்பட்டமையால் அப்பெறுமதி ரூபா 146,521,210 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | உரிய படிவத்தில் மூலதன சொத்துக்களை தாபிப்பதற்காக செலவிடப்பட்ட பெறுமதியை பதிவதற்கு நிரலொன்று காணப்படவில்லை. அதனால் பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளின் கைப்பற்றலாக பதியப்பட்டுள்ள நிரலில் மூலதன சொத்துக்களை தாபித்தல் மற்றும் கைப்பற்றுதலின் கீழ் செலவிடப்பட்ட குறுக்குப் பதிவுகள் அகற்றப்பட்ட நிதி ரீதியான பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமையினால் ரூபா 242,736,583 தொகை ஒன்று பதியப்பட்டிருந்தது. |
| (உ) | செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்படாதிருந்த வைப்புக்களின் செலுத்துதல்கள், ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவு மற்றும் அஞ்சல் அலுவலக முகவர் கொடுக்கல் வாங்கல் செலுத்துதல்கள் முறையே ரூபா 215,293,649 தொகை, ரூபா 4,382,021 தொகை மற்றும் ரூபா 156,200,520,949 ஆகும். | செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சரியான பெறுமதியைக் காண்பிக்க வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட முறையில் அதற்கு பின்னர் இந்தப் பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் வருகின்ற வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஊ) | முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ், உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் முற்பண பெறுவனவுகள் ரூபா 772,514,500 தொகை மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 845,813,729 தொகை | முற்பணப் பெறுவனவுகள் முதலீட்டு செயல்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழும் முற்பணக் கொடுப்பனவுகள் அந்த பாய்ச்சலின் செலவினத்தின் கீழும் | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கிற்குரிய முற்பண பெறுவனவுகள் ரூபா 772,514,500 தொகை மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 845,813,729 தொகை என்பன பதிவதற்கு விளக்கமான ஆலோசனைகள் |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்படவில்லை. | காண்பிக்கப்பட வேண்டும். | மற்றும் படிவங்களில் பதிவதற்கு நிரல் ஒன்று காண்பிக்கப்படாமையினால் இந்தப் பெறுமதி செலவிடலின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள வைப்புக் கணக்கு மற்றும் ஏனைய பொறுப்புக்களின் கீழ் பதியப்பட்டிருந்தது. |
| (எ) | திைறசேரிக்கு தீர்க்கப்பட்ட மொத்த கட்டு நிதி பெறுமதியான ரூபா 690,083,977 இற்குப் பதிலாக ரூபா 600,000,000 தொகை காசுப்பாய்ச்சலில் காண்பிக்கப்பட்டமையால் அந்த மீதி ரூபா 90,083,977 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட சரியான பெறுமதி பதியப்பட வேண்டும். | திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட மொத்த கட்டுநிதி ரூபா 690,083,977 பெறுமதியில் ரூபா 600,000,000 தொகை மாத்திரம் தீர்க்கப்பட்ட கட்டு நிதியின் கீழ் பதியப்பட்டிருந்ததுடன் திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட வழியில் நின்ற ரூபா 90,083,977 பெறுமதி வைப்புக் கணக்கு மற்றும் காசுச் செலவினத்தின் கீழ் உள்ள வைப்புக் கணக்கு மற்றும் ஏனைய பொறுப்புக்களின் நிரலின் கீழ் பெறுமதியில் உள்ளடக்கி பதியப்பட வேண்டி உள்ளது. |
| (ஏ) | 2018 சனவரி 01 இல் உள்ளவாறு கட்டு நிதிக்கணக்கில் காணப்பட்ட ரூபா 461,740,639 தொகையான மீதி மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கில் காணப்பட்ட ரூபா 455,954,301 தொகையான மீதி காசுப்பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்தபடவில்லை. | தீர்க்கப்படாத கட்டு நிதி மீதி காசுப்பாய்ச்சல் கூற்றில் பதியப்பட வேண்டி உள்ளது. | கட்டு நிதிக் கணக்கில் தீர்க்கப்படாத மீதியாக காணப்படுகின்ற கட்டு நிதிக் கணக்கில் காசு மீதியின் கீழ் பதியப்படாமையினால் காசேட்டின் மீதி பூச்சியமாக இருந்தமையினால் 2018 சனவரி மாதம் 01 ஆந் திகதியில் காணப்பட்ட கட்டு நிதிக் கணக்கில் தீர்க்கப்படாத ஆரம்ப மீதி ரூபா 461,740,639 மீதி மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத கட்டு நிதி மீதி ரூபா 455,954,301 தொகையான பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்றின் கீழ் பதிவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை. |

### 1.6.4 நிலுவை வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிலுவை வருமானம் சேகரித்தல் காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ரூபா 310,047,173 ஆக இருந்த போதிலும், நிலுவை வருமான விபரங்களின் பிரகாரம் ரூபா 707,549,824 ஆனமையால் வேறுபாடு ரூபா 397,502,651 ஆகும். | நிலுவை வருமானத்தை சேகரித்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதிக்குரியதாக சேகரிக்கப்பட்ட நிலுவை வருமானப் பணம் ரூபா 397,502,651 தொகையான பெறுமதி கைத்தவறினால் மீளாய்வாண்டின் வருமான சேகரித்தல் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |

### 1.6.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 15 மாவட்ட கணக்கு அலுவலகங்களின் தனிப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுமொத்தத்திற்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்குமிடையே முரண்கள் காணப்பட்டது. இந்த முரண்களுக்கிடையிலான வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிவதற்கு முடியாதிருந்த 05 மாவட்ட கணக்கு அலுவலகங்களின் முரண்களின் பெறுமதி ரூபா 3,493,191 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி தனிப்பட்ட மீதிகளின் பெறுமதியை விட கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி அதிகமாகவிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | திணைக்கள பரிசோதனைக்காக நீண்டகாலம் எடுத்தமையினால் அதனை பூர்த்தி செய்வதற்கும், வேறுபாடுகளை கண்டறியாத மீதிகளை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 3,493,191 தொகையான மீதியில் 2019 மே 31 ஆந் திகதி வரையில் ரூபா 410,018 தொகை இனங்காணப்பட்டிருந்தது. மேலும், ரூபா 1,295,400 தொகை களுத்துரை மாவட்ட கணக்காளர் அலுவலகத்தில் ஏற்பட்டிருந்த நிதி மோசடியாகும். அதன் பிரகாரம் ரூபா 1,705,418 பெறுமதியொன்று இனங்காணப்பட்டிருந்தது. நிதி மோசடி தொடர்பாக திணைக்கள மட்டத்தில் உள்ளக விசாரணையொன்றும், களுத்துரை விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினாலும் பரிசோதனையொன்றும் நடாத்தப்பட்டிருந்தது. எஞ்சிய இனங்காணப்படாத ரூபா 1,787,773 தொகையான வேறுபாடுகள் தொடர்பாக கடந்த கால பதிவேடுகளைப் பரீட்சித்து வேறுபாடுகளை தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மதிப்பீட்டுப் பெறுமதியையும் உள்ளபடியான பெறுமதியையும் ஒப்பீடு செய்த போது 12 வருமானத் தொகுதிகளில் சாதகமான முரண்கள் ரூபா 302,251 முதல் ரூபா 73,532,190 வரையான வீச்சில் காணப்பட்டதுடன், சதவீதமாக 35 சதவீதம் முதல் 257 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. 17 வருமானத் தொகுதிகளில் பாதகமான முரண்கள் ரூபா 2,259 முதல் ரூபா 84,092.351 வரையிலான வீச்சில் காணப்பட்டது. அது சதவீதமாக 25 சதவீதம் முதல் 418 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டதுடன் மதிப்பீடு செய்யப்படாத 04 வருமானத் தொகுதிகளுக்காகவும் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசிறைக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானத்தை எதிர்வுகூறுதல் மற்றும் மதிப்பீட்டைத் தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசிறைக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 3 இன் பிரகாரம் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது இந்த சகல பணிகள் தொடர்பாக ஆழ்ந்த ஆய்வின் பின்னர் வருமான மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக ஒரு மீண்டெழும் செலவின விடயத்திலும், 02 மூலதன செலவின விடயத்திலும் தேறிய நிதிஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 21,787,622 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அது தேறிய நிதிஏற்பாட்டில் 16 சதவீதம் முதல் 73 | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | திட்டமிடப்பட்ட மொழித்தேர்ச்சி தொடர்பான நிகழ்ச்சித் திட்டமொன்று அமுல்படுத்தப்படாமை, 2018 ஆம் ஆண்டில் பூஜாபிட்டிய அஞ்சல் அலுவலக நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமை மற்றும் முத்திரை அல்பமுக்கான பெறுகைகளின் போது கூறுவிலை சமர்ப்பிக்காமை போன்ற |

| | | |
|---|---|---|
| சதவீதத்திற்கிடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | | காரணங்களினால் 5 சதவீதத்தை விட அதிகமாக நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நி.பி 94 இன் பிரகாரம் நிதிஏற்பாடு இல்லாதிருக்கும் போது பொறுப்புக்களுக்கு உடன்பட முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 10 செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 173.56 மில்லியன் தொகையான பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | நி.பி 94 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | விசேடமாக சர்வதேச தபால் கொடுக்கல் வாங்கல்களின் போது உள்நாட்டு தபால் போக்குவரத்து நடவடிக்கைகளின் போதும், ஒவ்வொரு வருட இறுதியிலும் காலாண்டிற்குரிய செலவினம் அடுத்த ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டமையால் அந்நிய செலாவணி நாணயமாற்று விகிதத்தில் பாதகமான முரண்களினால் எதிர்பார்த்த செலவினத்தை விட மேலதிக செலவினங்களைச் செய்வதற்கு ஏற்பட்டமையால் இந்த நிலைமை எழுந்திருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பொலிசெக் உறையினை கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரும் போது ஒரு தனியார் நிறுவனத்தால் Lot 1 மற்றும் 2 இற்காக கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு பகுதிக்காக மாத்திரம் போதியளவான கேள்வி காப்புறுதியொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. போதியளவான கேள்வி காப்புறுதியொன்று சமர்ப்பிக்கப்படாமை, அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.8.4(ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | Lot 1 (சிவப்பு நிற) மற்றும் Lot 2 (வெள்ளை நிற) இற்காக தனித்தனியாக கேள்விக் காப்புறுதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், DSS Polysacks(Pvt) Ltd. நிறுவனம் ஒரு கேள்வி காப்புறுதியை மாத்திரம் சமர்ப்பித்திருந்தது. அதன் போது Lot 2 (வெள்ளை நிற) பொலிசெக் உறைக்காக ஆகக் |

| | | |
|---|---|---|
| கோவையின் 7.8.4(ஆ) பிரிவின் பிரகாரம் பாரிய புறக்கணிப்பாக கருதாமல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அந்த கேள்வி காப்புறுதி Lot 2 இற்காக சமர்ப்பிக்கப்பட்டதாகக் கருதி 75,000 வெள்ளை நிற உறைகள் இந்த நிறுவனத்திலிருந்து ரூபா 4,132,410 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | | குறைந்த விலை DSS Polysacks இனால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு கேள்விக் காப்புறுதியே அதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது |
| (ஆ) மத்திய தபால் மாற்றல்களில் ஸ்கேன் இயந்திரத்தை தாபிப்பதற்கான கட்டிட நிர்மாணம் | | |
| (i) தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.12.2(அ) பந்தியின் பிரகாரம் கேள்வி சமர்ப்பித்த ஒரே நபரினால் குறிப்பிடப்பட்ட கூறுவிலைகள் அதிகரித்துக் காணப்படுமாயின் அவற்றின் விலைகளைக் அதிகரித்துக் காணப்படுமாயின் அவற்றின் விலைகளைக் குறைப்பதற்கு கேள்விதாரருடன் கலந்துரையாட வேண்டும். எனினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் அளவிடைப் பத்திரங்களில் சில விடயங்களுக்காக அதிகரித்த விலையுடன் செல்லுபடியான கேள்வி சமர்ப்பித்த ஒரே கேள்விதாரருக்கு ரூபா 5.09 மில்லியன் தொகைக்கு பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.12.2(ஆ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த பெறுகைகளுக்காக தகைமைபெற்ற ஒரேயொரு கேள்விதாரர் ஜயதுங்க கன்ஸ்ரக்ஷன் ஆனமையால் அவரின் கேள்வி கூறுவிலை மதிப்பீட்டு விலையினை விட குறைவாக இருந்தமையால் ஒவ்வொரு கூறுவிலை தொடர்பாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ii) குறித்த திகதியில் உள்ளவாறு வேலையைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையினால் ஒப்பந்தக்காரர்களுக்கான அறிவுரைப் பத்திரத்தின் (ITB) 6.4 ஆம் பந்தியின் பிரகாரம் தாமதமான 42 நாட்களுக்காக ரூபா 560,709 தொகையான தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிவுரைப் பத்திரத்தின் 6.4 இன் விடயங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய தாமதக் கட்டணமான ரூபா 560,709 தொகையான மேற்கூறப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தமான நாரஹான்பிட்ட பொறியியல் பிரிவை திருத்துவதற்கான கொடுப்பனவுகளில் அவர்களது இணக்கப்பாட்டின் அடிப்படையில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(இ) தபால் திணைக்களத்தின் மத்திய தபால் மாற்றல்களுக்காக 03 எக்ஸ்ரே ஸ்கேனர் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு 02 இயந்திரங்களுக்கு ரூபா 25.42 மில்லியனுக்கும், ஒரு இயந்திரம் ரூபா 13.78 மில்லியனுக்கும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 39.21 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்வதற்காக 2017 நவம்பர் 22 ஆந் பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (i) இந்த பெறுகை செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு 2016 ஆகஸ்ட் 23 ஆந் திகதி தபால்மா அதிபரினால் பெறுகை கணக்காளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் 2017 நவம்பர் 22 ஆந் திகதியே கையளிக்கப்பட்டிருந்தது. பெறுகைகளால் பூர்த்தி செய்தல் 2018 யூலை மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக 02 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2016 செப்தெம்பர் 09 ஆந் திகதி எக்ஸ்ரே இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் 2017 நவம்பர் 22 ஆந் திகதி வரையிலும் இந்த ஒப்பந்தம் Excel Lanka International (Pvt) Company இற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த பெறுகைக்கு வருடமொன்றிற்கு அண்மித்த காலம் கடந்திருந்தது. மேலும் மதிப்பீட்டுக் குழுவிற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தராக இது தொடர்பாக விசேட அறிவைக் கொண்டுள்ள இராணுவ மேஜர் ஜனரல் ஒருவரே பங்குபற்றச் செய்யப்பட்டிருந்தார். அவரின் அதிக கடமைப் பழுவின் காரணமாக இந்தக் காலத்தில் கடமைத் தேவைக்காக அவ்வவ்போது வெளிநாடு சென்றிருந்தமையினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டத்திற்காக நாளொன்றை ஈடுபடுத்திக் கொள்ளுதல் பிரச்சினைக்குரியதாக இருந்தது. தாமதத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | இந்த நிலைமை காரணமாக இருந்தது. |
| (ii) | மேற்கூறப்பட்ட 03 இயந்திரங்களில் 02 இயந்திரம் கிடைத்த 11 மாதங்களும், மற்றைய இயந்திரம் கிடைத்து 06 மாதங்களும் கடந்திருந்த போதிலும், 2019 சனவரி வரையிலும் அந்த இயந்திரம் உபயோகிக்கும் நிலையில் காணப்பட்டது. | இந்த 03 இயந்திரங்களையும் உச்ச அளவில் பயன்படுத்தும் நிலையில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது 03 இயந்திரங்களும் உச்ச செயற்படு நிலையில் காணப்படுகின்றது. |

## 3.2 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 3.2 ஆம் பிரிவின் பிரகாரம் மேலதிக நேரப்படி குறித்துரைத்ததாக நிர்ணயிக்கப்பட்ட விடயங்களுக்காக செலுத்த முடியுமாக இருந்த போதிலும், சாதாரண வேலை நடவடிக்கைகள் அதற்குப் புறம்பாக இருந்த போதிலும், அவசரமாக இருந்த போதிலும், சாதாரண அலுவலக நேரத்தில் செய்ய முடியாத வேலைகள் மாத்திரமாக இருந்த போதிலும் கடமை நேரத்தில் நீண்ட மேலதிக நேரம் மற்றும் மேவுகை மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது. | தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | சேவையினை தொடர்ச்சியாக பேணிச் செல்லல், நுகர்வோர் வசதியீனங்களுக்கு உட்படாமை மற்றும் சேவையின் வினைத்திறனை பேணிச் செல்லும் வகையிலான கருமபீடங்களில் கடமை வெற்றிடங்களில் ஏற்படுமாயின் உடனடியாக அடுத்த கரும பீடத்தில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தரால் வெற்றிடமான கடமைகள் நிறைவேற்றப்படுகின்றமையினால் கஷ்டமான மேலதிக நேரப் படியாக தபால் திணைக்களம் விசேட மேலதிக நேர முறைமையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. |
| (ஆ) | தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதேவொரு திணைக்களம் தினந்தோறும் மேலதிக நேர வேலை காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பொழிப்பாக்கப்பட்ட மேலதிக நேரப்படியை நிர்ணயிக்குமாறு தாபன பணிப்பாளரிடமிருந்து | தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 3.5 பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மத்திய தபால் மாற்றல்களை செயற்படுத்தும் மேலதிக நேர முறைமை சரியான ஆய்விற்கு உட்படுத்தி மேலதிக நேரப் படிக்கு பதிலாக விசேட படி முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக உரிய தரப்பினருடன் கலந்துரையாடப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | கோரப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (இ) | தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 7.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் எந்தவொரு உத்தியோகத்தர்களும் மாதமொன்றிற்கு 20 மணித்தியாலத்தை விஞ்சுகின்ற மேலதிக நேரத்திற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் 20 மணித்தியாலத்தை விஞ்சுகின்ற மேலதிக நேரத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் மத்திய தபால் மாற்றல் ஊழியர்களின் 1509 ஊழியர்களுக்காக 20 மணித்தியாலத்தை விஞ்சி செலுத்தப்பட்ட மேலதிக நேரச் செலவினம் ரூபா 40.32 மில்லியனாகும். | தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் அதிகாரங்களை கையளித்தலின் கீழ் சகல வருடங்களுக்காகவும் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 03/2017 ஆம் இலக்கத்தின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களிலும் வருகை மற்றும் வெளிச் செல்கைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மத்திய தபால் மாற்றலில் இந்த இயந்திரம் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2017 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | 24 மணி நேரமும் திறக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்ற செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிறுவனமொன்றான மத்திய தபால் பரிவர்த்தனையில் கட்டாய சேவை தடவைகளை நடாத்துதல், நடமாடும் புகையிரத கடமைகளை நடாத்துதல், அஞ்சல் போக்குவரத்திற்காக வேன் வண்டி கடமைகள் போன்ற நடவடிக்கைகள் தொடர்பாக கணிசமான செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஊழியர் தரப்பொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அவர்களின் சேவைத் தடவைகளும் ஒன்றுக்கொன்று வேறுபாடானதாகும். அதனால் கைவிரல் அடையாள |

| | | | |
|---|---|---|---|
| | | | இயந்திரத்தின் பாவனை சீராக இருக்கவில்லை. |
| (உ) | 2012 யூன் 21 ஆந் திகதி முதல் அமுல்படுத்தும் வகையில் அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் பட்டோலையின் VIII இன் II ஆம் பந்தியின் பிரகாரம் அஞ்சல் சேவையின் I ஆவது தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கு தேவையான சகல தகைமைகளும் பூர்த்தி செய்யாமல் அஞ்சல் சேவையின் தரம் II உத்தியோகத்தர்கள் உள்ளீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் 10.2.1 இல் குறிப்பிடப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யாதிருந்த 668 உத்தியோகத்தர்களுக்காக தரம் I பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தன. | ஆட்சேர்ப்பு நடைமுறைக்குரிய பிரிவுகளைத் திருத்துமாறு கருதப்பட்ட பின்னர் மாத்திரம் பதவியுயர்வு வழங்க வேண்டியிருந்தமை மற்றும் வழங்கப்பட்டுள்ள பதவியுயர்வு தொடர்பான முறையான பரிசோதனையொன்றை நடாத்தி அதன் பெறுபேறுகளை உரிய தரப்பினருக்கு அறிக்கையிடல் வேண்டும். | புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் 10.2.1 இல் காண்பிக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள II ஆம் தரத்தின் உத்தியோகத்தர்கள் பொது பணிப்பொறுப்பு பரீட்சையில் சித்தியடைதலின் தேவையினைக் கவனத்தில் கொள்ளாமல் 2012 யூன் 22 ஆந் திகதி முதல் தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கு அரச சேவை ஆணைக்குழு தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் II தரத்திற்குரிய வினைத்திறமைகாண் தடை என்பன என்ற பிரச்சினை எழுந்தமையால் மீண்டும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் விசாரணை செய்யப்பட்டிருந்தது. பழைய ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்படுகின்ற பொதுப் பணிப்பொறுப்பு பரீட்சையில் சித்தியடையும் தேவையினை கவனத்தில் கொள்ளாமல் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 10.2.1 இல் காண்பிக்கின்ற தகைமைகளை பூர்த்தி செய்திருந்தால் தரம் I இற்கு பதவியுயர்வு செய்ய முடியும் எனவும், மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்கள் பழைய ஆட்சேர்ப்பு நடைமுறையின் அஞ்சல் சேவையின் தரம் II இற்குரிய உத்தியோகத்தர்கள் உரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை எனவும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பான தபால் திணைக்களத்திற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கும் இடையே பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட சர்ச்சைக்குரிய நிலைமையின் காரணமாக 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் | பதவியுயர்வுக்கு வழங்குவதற்கு முன்னர் எழுந்திருந்த சர்ச்சைக்குரிய நிலைமையினை கலந்துரையாடல் மூலம் தீர்வு கண்டு பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குதல் | கலந்துரையாடல் குறிப்பின் பிரகாரம் தீர்மானத்தை திருத்துவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தும் அந்தக் கலந்துரையாடலின் போது அவ்வாறான பொறுப்பொன்று தபால்மா அதிபருக்கு கையளிக்கப்படாமையினால் அந்தக் கலந்துரையாடல் குறிப்புக்களில் சரிசெய்வதற்கு முடியாதிருந்த விடயங்களை |

| | | | |
|---|---|---|---|
| | ஆணைக்குழு செயலாளரின் தலைமைத்துவத்துடன் இந்த நிறுவனத்தின் பிரதிநிதி, சம்பள ஆணைக்குழுவின் பிரதிநிதி மற்றும் அஞ்சல் அமைச்சின் பிரதிநிதி என்பவர்களுடன் நடாத்தப்பட்ட கூட்டத்தின் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் உரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையாக காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் திருத்த வேண்டி ஏற்படுமாயின் அதனை எழுத்து மூலம் தபால்மா அதிபரால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு கோருமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மற்றும் காணப்படும் நிலைமையினை ஆய்வு செய்து அறிக்கையிட வேண்டும். | உள்ளடக்குவதற்கும் முன்னிற்கும் வகையில் கோரி அமைச்சுச் செயலாளரினால் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்கு அக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (எ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாதுள்ள பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற, மரணமடைந்த, ஓய்வுபெற்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற மற்றும் ஏனைய ஊழியர்களின் கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 47.92 மில்லியன் ஆக இருந்தது. அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 24.36 மில்லியனாக இருந்ததுடன் அது 52 சதவீதமாகும். மேலும், வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 23.87 மில்லியன் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் பிணையாளரிடமிருந்து | ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பிரிவு மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட முடியாதுள்ள கடன் மீதி தொடர்பாக மேலும் ஆராய்ந்து அரசாங்கத்தின் செலவினத்தில் பதிவழிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை இனங்கண்டு அது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் நிலுவைக் கடன் மீதியை அறவிடுதல் தொடர்பாக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்காலத்தில் செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | களுத்துறை மாவட்ட கணக்கு அலுவலகத்தில் 06 வருடங்கள் முதல் ரூபா 1.29 மில்லியன் தொகையான நிதி மோசடிகளுக்குரிய நிலுவைக் கடன் மீதி காணப்பட்டதுடன் அந்த மீதியை நடப்பாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதி மோசடிக்குரிய விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் மற்றும் கணக்கீட்டு வழுக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 1,295,400 தொகையான நிதி மோசடிக்குரிய திணைக்கள மட்டத்திலான உள்ளக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் களுத்துறை விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூலமும் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே கணக்கீட்டு வழுக்கள் தொடர்பான ரூபா 340,217 தொகையான வேறுபாட்டிற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமையால் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டவைகளை உடனடியாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் தபால் திணைக்களத்தால் இனங்காணப்பட்ட 17 நோக்கங்கள் தொடர்பான தகவல்கள் முன்னைய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நோக்கங்களில் Bepost செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்களில் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதை | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அளவிடுவதற்கு விளக்கமான தரவு அடிப்படை ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும். | b-post இ செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மத்திய அளவிலான 200 தொழில் முயற்சியாளர்கள் மாத்திரம் பதிவு செய்திருந்தனர். மேலும் 2019 - 2023 ஆம் ஆண்டு காலத்தில் அமுல்படுத்தவதற்கு திட்டமிடப்பட்ட ஐந்து வருடத் திட்டமொன்று உள்ளடக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் மதிப்பீட்டிற்கு இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 9 மில்லியன் நிதிஏற்பாடு கோரப்பட்டிருந்த போதிலும், |

| | | |
|---|---|---|
| அளவிடுவதற்கான சரியான தரவு அடிப்படையை அமைத்துக் கொள்வற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. அதனால் மீளாய்வாண்டில் அடையப்பட்ட இலக்குகளின் அளவு தொடர்பாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | | அது கிடைக்காமையின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்காகவும் இதற்காக நிதி ஏற்பாடு கோரப்பட்டுள்ளது. |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தபால் திணைக்களத்தின் ஒட்டுமொத்த பதவியணியினர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 1,182 ஆக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து 09 பதவி வகைகள் தொடர்ச்சியாக வெற்றிடமாகக் காணப்பட்டன. | வெற்றிடங்களின் எண்ணிக்கையை தாமதமின்றி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் தேவையற்ற பதவியணியாயின் ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவியுயர்வு மற்றும் ஆட்சேர்ப்பு என்பன மேற்கொள்ளப்படுகின்றது. |